# தினசரி நடப்பு நிகழ்வுகள் - 05.08.2018

## இந்திய நிகழ்வுகள்

- Shor Nahin – மொபைல் செயலி - ஒலி மாசுபாட்டை குறைப்பதற்காக ஹிமாச்சல பிரதேச மாநில அரசானது Shor Nahin எனும் மொபைல் செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது.
  - "Horn not ok" எனும் விழிப்புணர்வு இயக்கத்தையும் ஒலிமாசுபாட்டை குறைக்க ஹிமாச்சல பிரதேச அரசு தொடங்கியுள்ளது.

- தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு (National commission for Backward classes) அரசியலமைப்பு அந்தஸ்து வழங்கும், அரசியலமைப்பு 123வது திருத்த மசோதா (123rd amendment Bill 2017) மக்களவையில் 02-08-2018 அன்று நிறைவேறி உள்ளது.
- **குறிப்பு:**
  - இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினை (OBC – Other Backward Class) வகைப்படுத்தி நீதிபதி "ரோகிணி" தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

## உலக நிகழ்வுகள்

- சீனாவை பின்னுக்குத் தள்ளி உலகின் இரண்டாவது மிகப்பெரிய பங்குச் சந்தை (world's second – biggest stock market) பரிமாற்றங்களைக் கொண்ட நாடாக ஜப்பான் உருவாகியுள்ளது.
  - அமெரிக்காவானது stock market-ல் முதலிடத்தில் உள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- லண்டனில் நடைபெற்ற மகளிர் ஹாக்கி உலக கோப்பை போட்டியில் "நெதர்லாந்து" அணி 8வது முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியுள்ளது.
    - அயர்லாந்து அணி இரண்டாவது இடத்திலும், ஸ்பெயின் அணி மூன்றாவது இடத்திலும் உள்ளது.

- சீனாவின் நஞ்சிங் நகரில் நடைபெற்ற உலக சாம்பியன்ஷிப் பாட்மிண்டன் போட்டிகளின் மகளிர் ஒற்றையர் பிரிவில் ஸ்பெயினின் கரோலினா மரி இந்தியாவின் "பிவி சிந்து"-வை தோற்கடித்து தங்கம் வென்றுள்ளார்.
    - இந்தியாவின் "பிவி சிந்து" வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- இம்பிரிண்ட் இந்தியா – 2 (IMPRINT – 2) திட்டம் - தேசிய தொழில்நுட்ப சவால்களை எதிர்கொள்ளும் வகையில் ஐஐடி (IIT), ஐஐஎஸ்சி (IISC) கல்வி நிறுவனங்கள் இணைந்து இம்பிரிண்ட் இந்தியா – 2 திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.
    - இத்திட்டத்தின் கீழ் புதிதாக 122 ஆராய்ச்சி திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது
    - IMPRINT – Impacting Research Innovation and Technology

- சீனாவானது லாங் மார்க் - 4B என்னும் இராக்கெட் மூலம் "Gaofen 11" என்ற புவி கண்காணிப்பு செயற்கைகோளை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.
    - இந்த செயற்கைக்கோள் அந்த நாட்டின் சாலை கண்காணிப்பு திட்டத்திற்கு பயன்படும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

- நாசாவின் முதல் மனித விண்வெளிப் பயணத்துக்கான ஒன்பது பேர் கொண்ட குழுவில் அமெரிக்க வாழ் இந்தியரான "சுனிதா வில்லியம்ஸ்" (Sunita Williams) விண்வெளி பயணத்திற்காக இரண்டாவது முறையாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
- **குறிப்பு:**
    - விண்வெளியில் இருக்கும் சர்வதேச விண்வெளி நிலையத்தில்

We Shine Academy™

இதற்கு முன்னதாக இரண்டு முறை தங்கியிருந்து கடந்த 2012ம் ஆண்டு பூமி திரும்பியவர் சுனிதா வில்லியம்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

- உலகின் முதல்முறையாக ஒற்றை குரோமோசோம் ஈஸ்டினை (single – chromosome yeast) “சீனா ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கி சாதனைப் படைத்துள்ளனர்.
  - 16 குரோமோசோம் பெற்றுள்ள ‘Brewer’s yeast-ல் இருந்து அதன் பண்புகள் மாறாத வகையில் இந்த ஒற்றை குரோமோசோம் ஈஸ்ட் பிரிக்கப்பட்டுள்ளது.

**விருதுகள்**

- அமெரிக்காவின் தொலைத் தொடர்பு கல்வியியல் மற்றும் தொழில்நுட்ப மன்றம் (AECT – Association for Educational Communication and Technology) வழங்கும் மிகச் சிறந்த விருதான சர்வதேச பங்களிப்பு விருது இந்தியாவின் கேரளா மாநிலத்தைச் சேர்ந்த “கே.அன்வர் சாதத்” என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

We Shine Academy™